நாங்கள் யார்?
PPLS சேவை அமைப்பானது மனோதத்துவ நிபுணர், உடல் உணர்வுகளை வெளிக்கொணரும் நிபுணர், மொழி உச்சரிப்பு மொழி கற்பித்தல் நிபுணர், ( Psychologues, Psychomotricien, Logopédistes) ஆகியோரை உள்ளடக்கியது.

பங்காளிகள்-

நாங்கள் மாணவர்களின் பெற்றோருக்கு மாணவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கான பொதுவான மன உளைச்சல்கள் உடல் செயற்பாடுகள் மொழி உச்சரிப்பு மொழி கற்றல் தன்மை போன்ற விடயங்களில் ஏற்படக் கூடிய கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு கல்விக் கூடங்களில் செயற்படுகின்றோம்.

பெற்றோர்கள் அல்லது இளையோர்களின் விருப்பத்திற்கு அமைய மாணவர்களினதும் சிறுவர்களினதும் முன்னேற்றத்திற்காக தேவைப்படும் விடயங்களை ஆராய்ந்து தீர்வினை வழங்குவோம். தேவைப்படின் ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவியும் வழங்கப்படும்.

அனைத்து சேவைக்குமான கட்டணம் வோமாநில அரசினால் வழங்கப் படுகின்றது.
ஆலோசனை மையங்களுக்கான இடம் கிராம சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

எமது சேவைகள்:-

மனோதத்துவம் (Psychologie)-
மனோதத்துவர்கள் உணர்வுப் பரிமாற்றம், உறவுப் பரிமாற்றம் ,கற்றல் திறனில் ஏற்படும் குழப்பம் சமுதாயத்தில் தன்னை ஈடுபடுத்தலில் ஏற்படக்கூடிய இடையூறுகள் போன்றவற்றிற்குக் காரணமாக அமையக்கூடிய மனக்குழப்பத்தினை ஆராய்ந்து தீர்வினை வழங்குவர்.

உடல் உணர்வுகளை வெளிக்கொணர்தல் (Psychomotricité)-
உடல் அசைவுகள் ஊடாக வெளிப்படுத்தக் கூடிய உணர்வுகள் செயற்பாடுகளில் ஏதாவது இடையூறு அல்லது குழப்பங்கள் ஏற்படும் போது அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வழங்குவர்.

உச்சரிப்பு மொழி கற்பித்தல் (Logopédie) கற்றல் அல்லது உச்சரிப்புக்களில் இடையூறுள்ள அல்லது குழப்பமுள்ள மாணவர்களுக்கு உதவி வழங்குதல்.

தகவல் பரிமாற்றம்
நாங்கள் பரிந்துரைப்பது-

- ஆய்வு செய்தல், பாடசாலையுடன் இணைந்து செயற்படல், குழுச்செயற்பாடு.
- ஆசிரியருடன் இணைந்து செயற்படல்.
- சந்திப்புக்கள்.
- கணிப்பீடு, அறிக்கை
- துணை நிற்றல், வைத்தியசேவை, ஆலோசனை சேவை.
- எவ்வாறு எம்முடன் தொடர்பு கொள்வது.